**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 7/2021

நாள் : 13.09.2022

வா.சா.1 திருமதி ராக்கம்மாள் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது தகப்பனார் பெயர் பூச்சி. 1, 2 வாதிகள் மற்றும் முதல் பிரதிவாதி பூச்சியின் வாரிசுகள். எனக்கு 1986 ல் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்தவுடன் நாங்கள் 1ம் பிரதிவாதியுடன் சென்னையில் அவரது வீட்டில் இருந்தோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர் இராமநாதபுரத்தில் சத்துணவு கூடத்தில் அமைப்பாளராக வேலை செய்தேன். திருமணம் செய்து கொண்டபின்பு நான் வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். திருமணம் முடிந்து சென்னை செல்வதற்காக நான் வேலையை ராஜினாமா செய்தேன் என்றால் சரியல்ல. அந்த வேலையை மீண்டும் எனக்கு பெற்றுத்தர முதல் பிரதிவாதி பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்காகவும் எனக்கு வேலையை மீண்டும் பெற்றுத்தருவதற்காகவும் முதல் பிரதிவாதி நிறைய செலவுகள் செய்ததால் சொத்துக்களில் எனக்கு இருந்த உரிமையை விட்டுக்கொடுப்பதாக 02.09.1989 அன்று எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் காணப்படுவது எனது கணவரின் கையொப்பம் அல்ல. இராமநாதபுரம் தாலுகா, பட்டிணம்காத்தான் குரூப் சர்வே எண் 459/2 ஏ –யில் அமைந்துள்ள சொத்தை அனைவரும் சேர்ந்து விற்பனை செய்தோம் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். மேற்கண்ட சொத்தை விற்பனை செய்து நானும், 2ம் வாதியும் தலா ரூ.1 லட்சம் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். ரூ.1 லட்சம் பெற்றுக்கொண்ட காரணத்தினால் 18.10.2005ல் நானும், 2ம் வாதியும், 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு விடுதலை பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தோம்

என்று சொன்னால் சரியல்ல. 18.10.2005 அன்று நான் ஒரு ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். ஆனால் அது பாகவிடுதலை ஆவணம் அல்ல. ரூ.1 லட்சம் பெற்றுக்கொண்டதற்கான ஆவணம் ஆகும். 2005ல் பாகவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு சுமார் 16 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை பாகம் கேட்டுத்தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் வசிக்கவில்லை. அதன் அருகில் வசித்து வருகிறேன். கடந்த 4, 5 வருடங்களாக எனக்கும் முதல் பிரதிவாதிக்கு இடையே பேச்சுவார்த்தை இல்லை. தாவா 1ம் இலக்க சொத்து எனது தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து இல்லை, எனது தகப்பனாருடன் பிறந்த இருளன், சித்திரவேலு ஆகியோர்களுக்கும் சேர்த்து கூட்டுப்பட்டாவாக உள்ளது என்று சொன்னால் கூட்டுப்பட்டாவில்தான் உள்ளது ஆனால் இடங்களை அவர்கள் மூவரும் தனித்தனியாகத்தான் அனுபவித்து வந்தார்கள். தாவா முதல் சொத்திற்கு மேற்சொன்ன மூவர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளதால் இருளன் மற்றும் சித்திரவேலுவின் வாரிசுகளை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வந்துள்ளதால் நான் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால் நாங்கள் தாக்கல் செய்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா முதல் இலக்க சொத்தில் எந்த பகுதியில் எனது தகப்பனார் அனுபவத்தில் இருந்தார் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

தாவா 2ம் இலக்க சொத்து 3ம் பிரதிவாதி கலையரசி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது எங்களுக்கு தெரியாமல் ஏற்பட்டதாகும். நான் கூறுவது தவறு என்றும் 2005ல் நானும், 2ம் வாதியும் சொத்துக்களை பொறுத்து பாகவிடுதலை எழுதிக்கொடுத்த காரணத்தினால் எங்கள் அனைவரது சம்மதத்தோடு 3ம் பிரதிவாதி பெயரில் தாவா 2ம் இலக்க சொத்திற்கு பட்டா

மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து நான் மனு தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா 3ம் இலக்க சொத்தில் எனது பெற்றோர்களின் சமாதிகள் உள்ளது என்று சொன்னால் எனது தகப்பனாரின் சமாதி மட்டும் உள்ளது. சமாதி இருக்கும் காரணத்தினால் அந்த சொத்தில் நாங்கள் யாருமே அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா 4ம் இலக்க சொத்தில் ஒரு கோவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். கோவில் இருக்கும் இடத்தை யாரும் தனிப்பட்ட முறையில் உரிமை கோர முடியாது என்று தெரிந்தே இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காரணம் இருளப்பசாமி கோவில் எங்கள் 2ம் பங்காளியான ஆறுமுகம் என்பவரது இடத்தில்தான் இருந்தது. ஆனால் இந்த தாவாவை நாங்கள் தாக்கல் செய்தபின்னிட்டு வேண்டுமென்றே எங்களுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் தாவா 4ம் இலக்க சொத்தில் கோவிலின் ஒருபகுதி கட்டப்பட்டது. வழக்கு தாக்கல் செய்தபின்பு கோவில் கட்டப்பட்டிருந்தால் நாங்கள் நீதிமன்றத்தில் தடை கேட்டு மனுத்தாக்கல் செய்திருப்போம் என்றும் அது வழக்கிற்கு முன்னரே கட்டப்பட்ட காரணத்தினால்தான் நாங்கள் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4ம் இலக்க சொத்தில் கட்டப்பட்டுள்ள கோவிலை தகுந்த எஞ்சினியரை கொண்டு ஆராய்ந்து பார்த்தால் அது எந்த வருடம் கட்டப்பட்டது என்பது தெரியவரும் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. உண்மையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே அந்த கோவில் கட்டப்பட்டது அதில் யாருமே அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

தாவா 5ம் இலக்க சொத்து சித்திரவேலு என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதற்குரிய ஆவணங்களை பிரதிவாதி

வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல தாவா 5ம் இலக்க சொத்து எனது தகப்பனாரின் அனுபவத்தில்தான் கடைசி வரை இருந்தது. அதற்குரிய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 5ம் இலக்க சொத்து சித்திரவேலு பெயரில் பட்டா இருந்த காரணத்தினால்தான் 2ம் பிரதிவாதியின் பெயருக்கு 5ம் இலக்க சொத்தை பொருத்து பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரியும் முதல் பிரதிவாதி இராமநாதபுரம் வந்தபோது சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டேன். அந்த சமயத்தில் முதல் பிரதிவாதி சென்னையில் இருந்தார் என்று சொன்னால் அவருக்கு இராமநாதபுரத்திலும் வீடு உள்ளது அவர் இங்கும் இருப்பார். சென்னையிலும் இருப்பார். 1ம் பிரதிவாதி எங்கள் வாழ்வாதரத்திற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்த பின்னர் பலவருடங்கள் கழித்து அவரை துன்புறுத்த வேண்டும் என்ற நோக்கில் சமாதி, கோவில்கள் உள்ள இடத்தை நான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மூலமாகத்தான் நானும், 2ம் வாதியும் அரசு வேலைகளை பெற்றோம் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.